

# பனிமயம்

நவம்பர் 2022

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...

உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

தங்கத் தேர் 2023க்கான பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. கடந்த 09.10.2022 ஞாயிறு - முழு இரவு தொடர் செபமாலை முடிந்தவுடன் - திரளான மக்கள் ஆரவாரத்துடன் கூடிவர, ஊடகவியலாளர்களின் முன்னிலையில் பனிமயத் தாயின் தங்கத் தேர் தேர்ப்பிறையிலிருந்து இழுத்துவரப்பட்டு, பேராலய வளாகத்திலுள்ள தேர் ஆயத்தக் கூடத்தில் நிறுத்தப்பட்டது. அதனையே பெரிய செய்தியாக மறுநாள் செய்தி ஏடுகள் வெளியிட்டன. பத்து ஆண்டுகளுக்குப் பின் நடைபெறும் தங்கத் தேர் மக்களின் ஆர்வத்தைத் தூண்டியுள்ளது கண்கூடு.

நமது முயற்சிகளிலும், உழைப்பிலும் நம்பிக்கை கொள்ளாமல், இறைவன்மீது நம்பிக்கை கொள்வோமாக. "நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையால் நானும், நான் கொண்டுள்ள நம்பிக்கையால் நீங்களும் **ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டப்** பெறவேண்டுமென" (உரோ 1:12) விழையும் பவுலடியாரோடு இணைந்து நாமும் நம்பிக்கையில் ஆழப்படுவோமாக.

அதே ஆர்வத்துடனும், இறைநம்பிக்கையுடனும் நாம் தங்கத் தேர்ப் பெருவிழாவின் ஆசிகளுக்காகத் தொடர்ந்து மன்றாடுவோமாக. கடந்த 25.09.2022 ஞாயிறு அன்று தொடங்கிய **300 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு** 30 நாள்களைக் கடந்து நடைபெற்று வருகிறது. நாள்தோறும் மூன்று இல்லங்களில் பனிமயத் தாயின் திருவுருவம் வரவேற்கப்பட்டு, பரிந்துரை மன்றாட்டுகள் ஏறெடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு திருப்பலியிலும் தங்கத் தேரின் ஆசிகளுக்காக மன்றாடுகிறோம்.

இந்த நம்பிக்கையோடு நாம் தொடர்ந்து மன்றாடுவோமாக. தங்கத் தேரின் ஆசீர்வாதங்களுக்காக இம்மாதம் 20.11.2022 கிறிஸ்து அரசர் பெருவிழா அன்று காலை 10.30 மணி முதல் மாலை 05.00 மணி வரை தொடர் நற்கருணை ஆராதனை நடைபெறவுள்ளது. வாருங்கள், எல்லாரும் மன்றாடுவோம், தங்கத் தேரில் பவனி வரவிருக்கும் பனிமயத் தாயின் பரிந்துரையால் கிறிஸ்து அரசரின் ஆசிகளைப் பெற்றுக்கொள்வோம்.



என்றும் அன்புடன்,
**அருள்பணி. குமார்ராஜா**
பங்குத் தந்தை & திருத்தல அதிபர்

உதயம் 23 தாரகை 3

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**துன்புறும் குழந்தைகளுக்காக...**

வீடற்ற, அநாதைகளான, போரில் பாதிக்கப்பட்ட துன்புறும் குழந்தைகளுக்குக் கல்வி மற்றும் குடும்ப பாசத்தை அனுபவிக்கும் வாய்ப்பு உறுதியாகக் கிடைக்க நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. அன்னை மரியாவும் பிறரன்புப் பணியும்! ........................4
அருள் மரி வேந்தன்

2. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...........6
செல்வராஜ் மிராந்தா

3. மரியன்னைப் புனிதர்கள் :
புனித தாமஸ் அக்குவினாஸ் ..................................................8
அருள்பணி. குமார்ராஜா

4. வாழ்ந்து காட்டுவோம்... வாங்க! .........................................10
கலாபன் வாஸ்

5. பனிமய அன்னை -
பனிமய மாதா தங்கத் தேர் பவனி .....................................12
தி. சொர்ணராஜன் விக்டோரியா

6. நம் திருஅவை, நமது பெருமை
நேர்த்தியான நிறுவனம்!......................................................14

7. தூத்துக்குடி மறைமாவட்ட அளவில்
கூட்டுத் திருமண விழா - 2023 .......................................16

8. விவிலியப் போட்டி ...............................................................18

9. மாதம் ஒரு மாதா படம் .......................................................21

10. பனிமயப் பகிர்வு ...................................................................22

# அன்னை மரியாவும் பிறரன்புப் பணியும்!



பிறருக்கு உதவுகின்ற அன்பின் பணியை எப்படிச் செய்யவேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக லூக்கா நற்செய்தியில் வரும் அன்னை மரியா எலிசபெத்தைச் சந்தித்த நிகழ்ச்சியை (லூக் 1:39-45) எடுத்துக் கொள்ளலாம். இந்த சந்திப்பு மிக உணர்வுபூர்வமானதாக, அன்புப் பணியின் மாண்புக்கும், உறவின் வளமைக்கும் ஒரு சான்றாக அமைந்துள்ளது என்பதை இப்பகுதியின் ஒவ்வொரு சொல்லும் சொல்லாமல் சொல்கின்றது.

இந்தச் சந்திப்பிலிருந்து பிறரன்புப் பணிக்காக நாம் கற்றுக்கொள்ளும் உறவின் உத்திகள் பத்தினைப் பார்ப்போம்:

**1. முன் வருதல்.** தன் உறவினரான எலிசபெத்து கருத்தரித்திருக்கிறார் என்று கேள்விப் பட்டவுடன் எந்தவிதத் தயக்கமுமின்றி, அன்னை மரியா தாமாகவே முன்வந்து எலிசபெத்தைச் சந்திக்கவும், அவருடன் தங்கி உதவி செய்யவும் முன் வருகிறார். நம் அன்புப் பணிகளில் இத்தகைய முன் முனைப்புகள் தேவை. பிறர் நம்மிடம் வந்து உதவி கேட்கும் முன்பே அவர்களது தேவையை அறிந்து நாமாக உதவும் பண்பை அன்னை மரியாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

**2. விரைவு.** "மரியா புறப்பட்டு விரைந்து சென்றார்" என்று நற்செய்தியாளர் குறிப்பிடுவதை வாசிக்கும்போதே நமக்கு நிறைவாக இருக்கிறது. "உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்னும் குறள் கூறுவதுபோல, விரைந்து செயல்படுவதுதான் நல்ல நட்புக்கு, உறவுக்கு அடையாளம். அதுபோல, எளியோருக்குச் செய்யும் உதவிகளை விரைந்து செய்ய வேண்டும். அவர்களை அலைக்கழிப்பதோ, "நாளை வாருங்கள்" என்று அவர்களைத் திருப்பி அனுப்புவதோ, அன்புப் பணியை அவமதிப்பதாகும்.

**3. வாழ்த்து.** மரியா எலிசபெத்தைச் சந்தித்ததும் அவரை வாழ்த்தினார் என்று நற்செய்தி கூறுகிறது. கருவுற்றிருக்கிறார் என்று அறிந்ததும், அந்த நல்ல செய்தியில் தான் மகிழ்வதோடு, நல்ல செய்தியைப் பெற்றிருக்கும் நபருக்கு உளமார்ந்த வாழ்த்தைத் தெரிவிப்பது உறவின் ஒரு கூறு. நாம் அன்புப் பணியாற்றும்போது, பயனாளர்களை வாழ்த்துவதும், புன்னகையோடு வரவேற்பதும் நல்ல பண்பாகும்.

**4. மகிழ்ச்சி.** அன்னை மரியா எலிசபெத்தைச் சந்தித்தபோது, எலிசபெத் மகிழ்ச்சி அடைந்தார். அவருடைய வயிற்றிலிருந்த குழந்தையும் மகிழ்ச்சியால் துள்ளியது. நாம் யாருக்கு உதவுகிறோமோ அவர்களும், அவர்களுக்குப் பணி செய்கின்ற நாமும் உள்ளார்ந்த மகிழ்ச்சி கொள்வது என்பது அன்புப் பணியின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகும்.

**5. உடன் உறைவோரின் மகிழ்ச்சி.** மரியாவின் வருகையாலும், வாழ்த்தாலும் மகிழ்ச்சி அடைந்தது எலிசபெத்து மட்டுமல்ல, அவரது வயிற்றிலிருந்த குழந்தையும்கூட என்பதை நற்செய்தியாளர் நன்றாகப் பதிவு செய்திருக்கிறார். நாம் பயனாளர்களின் வீடுகளைச் சந்திக்கும்போது, நமது வருகையும், இருத்தலும் அவர்களுக்கு மட்டுமல்ல, அவரது உடன் உறைவோருக்கும் மகிழ்ச்சியைத் தரவேண்டும். அது மட்டுமல்ல, அந்த இல்லத்தில் உள்ளவர்கள் தொந்தரவு அடையாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**6. தூய ஆவியாரின் ஆட்கொள்ளல்.** மரியாவின் வருகை எலிசபெத்துக்குத் தூய ஆவியார் என்னும் கொடையைக் கொண்டுவந்தது. பொதுவாக, நாம் பயனாளர்களுக்குப் பரிசுப் பொருள்கள், உணவுப் பொருள்களை வழங்குகிறோம். அது நல்லதே. ஆனால், அதைவிடச் சிறந்தது நம்மோடு இறைப் பிரசன்னத்தை, இறையாசியை எடுத்துச் செல்வது. யாரைச் சந்திக்கச் செல்கிறோமோ, அவர்களுக்காக இறையாசி வேண்டி செபித்துவிட்டுச் செல்கிற பழக்கத்தை நாம் கற்றுக்கொள்ளலாமே!

**7. நன்றி.** அன்னை மரியாவின் வருகைக்காகவும், தன்னோடு தங்கியிருந்து செய்யவிருக்கிற உதவிக்காகவும் எலிசபெத்து நன்றியுணர்வால் நிறைகிறார். "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?" என்று கேட்டு, தன் நன்றியை வெளிப்படுத்துகிறார். நாம் பயனாளர்களிடம் நன்றியை எதிர்பார்ப்பதற்குப் பதிலாக, பயனாளர்களுக்குப் பணிவிடை செய்ய நமக்கு வாய்ப்பு தருவதற்காக நாம்தான் அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

**8. இறையூக்கம்.** எலிசபெத்தை அன்னை மரியா சந்தித்தபோது, எலிசபெத் "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" என்று மரியாவைப் பாராட்டி, அவரது இறைநம்பிக்கையை ஊக்கப்படுத்துகிறார். நாம் யாருக்கு அன்புப் பணி செய்கிறோமோ அவர்களை இறைநம்பிக்கையில் ஊக்கப்படுத்துவது நம் கடமையாகும்.

**9. உதவி.** அன்னை மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்தார் என்னும் செய்தி அன்னை மரியாவை நன்கு உயர்த்திக் காட்டுகிறது. உறவின் உயர்வுகளில் ஒன்று உடன் இருத்தல். இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளல். மரியா உடன் இருந்து, பணிவிடை செய்து உறவில் உயர்ந்தார். உதவி தேவைப்படுகிறவர்களோடு உடன் இருப்பதே மிகப் பெரிய உதவியாகும்.

**10. பணிவு.** எலிசபெத்தின் வாழ்த்துக்கு மறுமொழியாக அமைகிறது அன்னையின் புகழ்ப்பாடல். இறைவனைப் போற்றிப் பெருமைப்படுத்தும் அன்னை, தாம் இறைவனின் அடிமை என்றும், தாழ்நிலை நின்று இறைவனால் உயர்த்தப்பட்டவர் என்றும் அறிக்கையிட்டு, தன் பணிவை வெளிப் படுத்துகிறார். எங்கே பணிவு இருக்கிறதோ, அங்கே ஆன்மீகம் வளரும். ஆணவம், தன்னலம், தான்மை, வல்லாண்மை ஆகிய உறவின் எதிரிகள் மறைந்துவிடும். நமது பிறரன்புப் பணிகள் நம்மைப் பணிவு மிக்கவர்களாக மாற்றவேண்டும்.

அன்னை மரியாவிடமிருந்தும், எலிசபெத்திடமிருந்தும் இந்த பணியின் பண்புகளைக் கற்றுக்கொண்டு, நாமும் நல்லுறவில் வளர்வோம்.

**அருள் மரி வேந்தன்**

18



# பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...

ஜாதி மத எல்லைகளைக் கடந்து தூத்துக்குடி நகரில் வாழும் மக்களெல்லாம் தங்கள் பாதுகாவலியாக வணங்கும் பரிசுத்த பனிமயத் தாயின் வழியாக மக்கள் பெற்ற பல அற்புதங்களையெல்லாம் நினைத்துப் பார்த்தபோது, அருள்தந்தை **ஹெர்மஸ் அடிகளாருக்கு,** தான் லூர்த்துநகர் சென்ற போது பார்த்த மெழுகுதிரி வெளிச்சப் பவனி நினைவுக்கு வந்தது. அதுபோன்ற ஒரு பவனியை இங்கு தொடங்கினால் என்ன என சிந்தித்தார். அதை செயல்படுத்தினார்.

ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை ஆலயத்தைச் சுற்றி எரியும் மெழுகுதிரிகளை கைகளில் ஏந்தியபடி ஜெபமாலை பவனி வர ஏற்பாடு செய்தார். எதிர்பார்த்ததைவிட மக்கள் மத்தியில் அதிக வரவேற்பைப் பெற்றது. அதுமட்டுமல்ல, பவனியில் மாதாவின் சுரூப சப்பரம் ஒன்றும் கொண்டு செல்ல வேண்டும் என மக்கள் ஏகோபித்து சொல்லவே ஒரு சிறு சப்பரம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டது. இன்றுவரை ஒவ்வொரு முதற் சனிக்கிழமையும் பவனி தொடர்கிறது.

கடலிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட நுரை கற்களால் ஆலயத்தின் கனத்த சுவர்கள் எழுப்பப்பட்டிருப்பதால் மழைக் காலங்களில் நீர்க்கசிவுகள் ஏற்பட்டு சுவரின் கீழ்ப்பகுதியின் சிமிண்டு பூச்சு பாதிக்கப்படுவதால், மேல் பூசப்பட்ட வர்ணம் கழல்வதைக் கவனித்தார். அதை நிறுத்துவதற்கு ஆலயத்தின் உட்பக்கம் சுவர் முழுவதும் ஐந்து அல்லது ஆறு அடி உயரத்திற்கு ஏதாவது ‘டைல்ஸ்’ ஒட்டினால் போதும் என பலர் சொன்ன ஆலோசனைகள் நன்றெனப்படவே, அதன்படியே செய்ய நினைத்தார்.

நினைவுகள் செயல்வடிவம் பெறும்போது சில சறுக்கல்கள் ஏற்படுவதும் உண்டு. ஆலயத்தின் அகலமான பின்புலம், சுவர்களில் பூசப்பட்டிருக்கும் வர்ணம் இவற்றை மனதில் கொண்டு அவற்றோடு பொருந்துகின்ற நிறமும் வடிவமும் தன்மையும் கொண்ட டைல்ஸ்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். ஏறத்தாழ ஒன்பது அல்லது பத்து அங்குல சம சதுர வடிவமும் ஆகாய நீலநிறமும் கொண்ட டைல்ஸ்கள் பதிக்கப்பட்டன. நடுப்பத்தியில் பதிக்கும் பணி முடிந்தபோது, அதன் அழகு எடுபடவில்லை எனப் பலர் பேசிக் கொண்டனர். ஏதோ வீடுகளில் எங்கோ பதிக்கப்பட்டதுபோல் தோற்றமளித்ததாகச் சொன்னார்கள்.

ஆலயத்தின் இரு பக்கப் பத்திகளும் (குருசுபத்திகள்) அருள்தந்தை விஜிலியுஸ் மான்சி காலத்தில் கட்டப்படவில்லை என்பதை பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியில் அதாவது 1890களில் (இலங்கையில்) கொழும்பில் வணிகத்தில் ஈடுபட்டிருந்தவர் களால் ஏற்பாடு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட புகைப்படம் சான்று பகரும். அவை 1905ஆம் ஆண்டு கட்டப்பட்டவை. இரும்பு கர்டர் உத்தரங்களும் ரங்கூன் தேக்குச் சட்டங்களும் பொருத்தி செங்கல் குத்தி வேயப்பட்ட மட்டப்பாக்கள் ஆலயத்தின் மற்ற பகுதி கட்டுமானங்களிலிருந்து வேறுபட்டிருப்பதைக்




காணலாம். என்றாலும் ஆலயத்தின் வடக்கு பக்கப் பத்தி (கிரக்கோப் தெருப்பக்கம் இருக்கும் குருசு பத்தி)யின் கிழக்கு சுவரில் ஒரு அகலமான 'சுவர் அலமாரி' இருந்ததை பலர் பார்த்திருக்கலாம்.

அந்த அலமாரியைத் திறந்தால் தட்டுகளில் கொடிகள் மடித்து வைக்கப்பட்டிருக்கும். அந்த தட்டுகள் உள்ள ராக்கை தள்ளினால் கதவு திறக்கும். கீழே படிக்கட்டுகள் தெரியும். அதுவழியே இறங்கினால் ஒரு நிலவறை (சுரங்க அறை) இருந்தது. அதில் ஆண்டவரின் ஆசந்தி சுரூபம், வெரோனிக்கம்மாள் சுரூபம், பிடிபட்ட ஆண்டவர் சுரூபம் இவை பத்திரப் படுத்தி வைக்கப்பட்டிருந்தன. அச்சுரூபங்களில் சில இப்போது சிலுவைக் கோயிலில் இருப்பதைக் காணலாம்.

பக்கப் பத்திகளில் (குருசு பத்திகளில்) டைல்ஸ் பதிக்கும்போது அந்த அலமாரி அகற்றப்பட்டு அந்த நிலவறை கற்களால் நிரப்பப்பட்டு, சுவர் பூசப்பட்டு, அதன் சுவடு தெரியாமல் ஆகாய நீல நிற டைல்ஸ் பதிக்கப் பட்டுவிட்டன.

அந்த நிலவறை எப்போது யாரால் எதற்காக நிறுவப்பட்டது என்ற விவரங்கள் தெரியவில்லை. நல்ல முறையிலே எல்லாரும் பாராட்டுகின்ற வகையில் மூன்று ஆண்டுகள் பங்குத் தந்தையாகப் பணியாற்றிவிட்டு 1990இல் அருள்தந்தை ஹெர்மஸ் அடிகளார் மாற்றலாகிச் சென்றார்கள். இலத்தீன் மொழியில் புலமை பெற்றிருந்த அடிகளால் இலத்தீன் மொழி போதிக்கக் குருமடத்தில் சில காலம் பணியாற்றினார்கள்.

தொடரும்...

**செல்வராஜ் மிராந்தா**



# புனித தாமஸ் அக்குவினாஸ்

(1225 - 1274)


## மரியாமீது பாசம் கொண்ட திருஅவை வல்லுநர்!

திருஅவையின் புகழ்பெற்ற சிந்தனையாளர்களுள் ஒருவர்தாம் இத்தாலி நாட்டினரான புனித தாமஸ் அக்குவினாஸ். நாம் இன்றுவரை பாடும் "மாண்புயர்" என்னும் நற்கருணைப் புகழ்ப் பாடலுக்கும், எல்லாக் குருமாணவர்களும் பாடமாகப் படிக்கும் "சும்மா தியோலஜியே" என்னும் இறையியல் பாடத் திரட்டுக்கும் சொந்தக்காரர் இவரே.

மெய்யியல், இறையியல் இரண்டிலும் புகழ்பெற்று நடுக்கால சிந்தனையாளர்களுள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியவர் என்று கருதப்படுகிறார் இப்புனிதர். கிரேக்க மேதை அரிஸ்டாட்டிலின் சிந்தனைகளை கிறித்தவமயமாக்கிய பெருமைக்குரியவர். புனித தொமினிக்கன் சபைத் துறவியான அக்குவினாஸ் எழுதாத தளமே இல்லை என்று சொல்லலாம். அவரது எழுத்துகளில் அன்னை மரியா பற்றிய அரிய கருத்துகள் காணப் படுகின்றன. மரியியல் சிந்தனையாளராக மட்டுமல்ல, மரியன்னையின் அன்பு மகனாகவும் விளங்கினார் புனித தாமஸ் அக்குவினாஸ்.

கபிரியேல் தூதரின் "அருள் நிறைந்த மரியே வாழ்க' என்னும் வாழ்த்தொலி மூன்று விதங்களில் சிறப்பானது என்று எழுதி நம்மை வியப்படையச் செய்கிறார் இப்புனிதர்.

வானதூதர்கள் மனிதர்களுக்குத் தோன்றுவதும், அவர்களோடு உரையாடுவதும் முற்காலத்தில் (இக்காலத்திலும்கூட) மிகவும் அரிதான மற்றும் சிறப்பான நிகழ்வுகளாகக் கருதப்பட்டது. காரணம், வானதூதர்கள் மனிதர்களைவிட மேலானவர்களாக மதிக்கப்பட்டனர். மூன்று விதங்களில் தூதர்கள் மனிதர்களைவிட மேலானவர்கள் என்கிறார் தாமஸ் அக்குவினாஸ்.



**1. மாண்பு மிகுந்தவர்கள்:** வானதூதர்கள் உடல் உள்ளவர்களல்லர், மாறாக உடலற்ற ஆவிகள். "காற்றுகளை உம் தூதராய் நியமித்துள்ளவர்" (திபா 104:4) என்கிறது திருப்பாடல் 104. எனவே, அவர்கள் மாண்பு மிகுந்தவர்கள்.

**2. இறைவனின் நெருக்கம்:** இரண்டாவது, வானதூதர்கள் இறைவனோடு கொண்டுள்ள நெருக்கம். தூதர்கள் இறைவனுக்கு எந்நேரமும் பணிவிடை செய்துகொண்டே இருப்பதால். இறைவனுக்கு எப்போதும் நெருக்கமாகவே இருக்கிறார்கள். "பல்லாயிரம் பேர் அவருக்குப் பணிபுரிந்தார்கள். பல



கோடிப்பேர் அவர் முன் நின்றார்கள்" (தானி 7:10) என்று தானியேல் இறைவாக்கு நூல் குறிப்பிடுவது வானதூதர்களைப்பற்றியே. ஆனால், மனிதர்களோ, தம் பாவத்தினால் இறைவனை விட்டு விலகியே இருக்கிறார்கள். எனவே, மனிதர்கள் வானதூதர்களுக்கு வணக்கம் செலுத்துவதே சரியானது என்கிறார் புனித தாமஸ்.

**3. ஒளி நிறைந்தவர்கள்:** மூன்றாவதாக, வானதூதர்கள் இறைமாட்சியின் நிறைவான வெளிப்பாடாக இருக்கிறார்கள். "அளவிட முடியுமா அவர்தம் படைகளை? எவர்மேல் அவரொளி வீசாதிருக்கும்?" என்று யோபு புகழ்ந்து பாடுவது வானதூதர்களைப் பற்றித்தான் (யோபு 25:3). எனவே, தூதர்கள் எப்போதும் ஒளியோடு தோன்றுகிறார்கள். ஆனால், மனிதர்களோ இறையருளின் முழு நிறைவையும் அடையவில்லை. எனவே, ஒளி குறைந்தவர்களாகவும், இருள் நிறைந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

எனவே, இம்மூன்று விதங்களிலும் தூதர்கள் மனிதர்களைவிட உயர்ந்தவர்களாய் இருப்பதால், மனிதர்கள் தூதர்களை வணங்குவதே பொருத்தமானது. தூதர்கள் மனிதருக்கு வணக்கம் செலுத்துவது முறையல்ல என்று ஆகிறது.

ஆனால், அன்னை மரியா மட்டுமே மேற்சொன்ன மூன்று பண்புகளும் நிறைந்தவராக விளங்கினார். அன்னை மரியா மாண்பு மிகுந்தவர், இறைவனுக்கு நெருக்கமானவர், தூய ஆவியாரால் நிரம்பி ஒளி நிறைந்தவர், அருள் நிறைந்தவர். எனவே, அன்னை மரியாவை கபிரியேல் தூதர் வாழ்த்தியது பொருத்தமே என்று வானதூதரின் வாழ்த்துரைக்கு விளக்கம் தந்தார் புனித தாமஸ் அக்குவினாஸ்.

முதல் (பழைய) ஏற்பாட்டில் அன்னை மரியாவின் முன்னோடிகள் பலரைச் சுட்டிக்காட்டியுள்ளனர் திருமறைத் தந்தையர். அவர்களின் மரபில் வந்த புனித தாமஸ் அக்குவினாசும் முதல் ஏற்பாட்டில் அன்னை மரியாவின் முன்னறிவிப்பை எடுத்துக் காட்டியுள்ளார். "ஈசாய் என்னும் அடிமரத்தில் இருந்து தளிர் ஒன்று துளிர்விடும். அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனி தரும்" (எசா 11:1) என்னும் இறைவாக்கு அன்னை மரியாவைக் குறிக்கிறது என்கிறார் அவர்.

"நீரே எருசலேமின் மேன்மை. நீரே எருசலேமின் பெரும் மாட்சி. நம் இனத்தாரின ;உயர் பெருமை நீரே" (யூதி 15:9) என்று பாராட்டப்படும் யூதித்து அன்னை மரியாவுக்கு முன்னோடியாக இருக்கிறார் என்று எழுதினார் அவர். முதல் ஏற்பாட்டின் எஸ்தர் அரசியும் அன்னை மரியாவின் முன் அடையாளமாக இருக்கிறார் என்பதுவும் அவரது கருத்தே.

"ஓ மிகவும் பேறுபெற்ற, இனிய கன்னி மரியே, இறைவனின் தாயே, கனிவால் நிறைந்தவரே. எல்லாம் வல்லவரின் அன்பு மகள் நீரே. வானதூதரின் அரசியும் நீரே. இறைமக்கள் அனைவரின் தாயும் நீரே. உம் இரக்கமுள்ள இதயத்திற்குள் என் உடலையும், ஆன்மாவையும் ஒப்புக்கொடுக்கிறேன். என் செயல்கள், சிந்தனைகள், தேர்வுகள், என் வாழ்வும், இறப்பும் உமக்கே சொந்தம். உம் திருமகனின் திருவுளப்படியே நான் ஒழுங்கமைதியுடன் வாழ எனக்கு உதவி செய்யும், ஆமென்" என்பது தாமஸ் அக்குவினாஸ் இயற்றிய மரியன்னை மன்றாட்டின் ஒரு சிறு பகுதி.

மாபெரும் சிந்தனையாளராக இருந்தாலும், அன்னை மரியாவின் அன்பு மகனாகத் தம்மைத் தாழ்த்திக் கொண்ட புனித தாமஸ் அக்குவினாஸ் மரியன்னையின் பிள்ளைகள் அனைவருக்கும் சிறந்த மாதிரியாய் விளங்குகிறார்.



அருள்பணி. குமார்ராஜா

# வாழ்ந்து காட்டுவோம்... வாங்க!

**வாழும் ஆசை யாரை விட்டது?**

நோய்வாய்ப்பட்டுக் கிடந்தவரிடம் மருத்துவர் கூறினார், "உங்களிடம் உண்மையைச் சொல்லிவிட கொண்டும் என்று நினைக்கிறேன்... உங்கள் முடிவு காலம் நெருங்கிவிட்டது... யாரையாவது நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா?"

"ஆம்!" - என்று பதில் வந்தது.

"யாரைப் பார்க்க விரும்புகிறீர்கள்?"

"வேறொரு நல்ல மருத்துவரைத்தான்!"

இறப்பு என்பது தவிர்க்க முடியாததுதான். எனினும், இன்னும் கொஞ்ச காலம் வாழ வேண்டும் என்ற உந்துதல் எல்லா மனிதர்களுக்கும் இருக்கிறது!

**சமநீதியளிக்கும் சாவு**

வறுமையில் வாடும் முதியவர், பசியினால் தவித்துக் கொண்டிருந்தார்.... உண்ண உணவில்லை.... வேறு வழியில்லாமல், அருகிலிருந்த கோழிப் பண்ணையிலிருந்து ஒரு கோழியைத் திருடிக் கொண்டு வந்து சமைத்துக் கொண்டிருந்தார்.

குடிசைக் கதவு தட்டப்பட்டது...

"யார் அது?"

"நான்தான் கடவுள்.... பசியாயிருக்கிறது.... கோழிக்கறி வாசம் வருதே!.... எனக்கும் கொஞ்சம் கொடு!"

"எல்லாரையும் சமமாக நடத்தத் தெரியாதவரோடு என் உணவைப் பகிர்ந்து கொள்ள எனக்கு விருப்பமில்லை! ......ஒரு சிலருக்குத் தேவைக்கு அதிகமாகக் கொடுத்து விட்டு பலரையும் பசிபட்டினியால் வாட்டி எடுக்கிறீர்... ஓரவஞ்சம் நிறைந்தவரே! இடத்தைக் காலி பண்ணும்! - என்றார் முதியவர்.

சற்று நேரத்திற்குப் பிறகு, வேறொருவர் கதவைத் தட்டினார்.... யாராயிருக்கும் என்று எட்டிப் பார்த்தார் முதியவர்.

அங்கே வந்து நின்றவர் சாவு!

உற்சாகத்தோடு அவரைக் குடிசைக்குள் வரவேற்று, "நீதான் எல்லாரையும் ஒன்றாக நடத்துபவன்! வா.... வா.... சேர்ந்து சாப்பிடுவோம்" என்றார் முதியவர்.

ஏழை, பணக்காரர், படித்தவர், படிக்காதவன் என்ற எந்தப் பேதமுமின்றி எல்லாரையும் சரி சமமாக நடத்தும் ஒரே நபர், சாவுதான்!.... வாழ்க்கையில் வெந்து நொந்து கிடப்பவர்கள், சாவை ஆவலோடு எதிர்பார்ப்பதுண்டு.

**தவிர்க்க முடியாத சாவு**

வழிப்போக்கன் ஒருவர், கடற் பயணத்திற்காகப் படகில் ஏறினார்.... கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது.





“இவ்வளவு மோசமான புயல்காற்றில், கடலில் படகோட்ட உமக்குப் பயமில்லையா?” - என்று படகு ஓட்டுபவரிடம் கேட்டார்.

“எனக்கென்ன பயம்?.... இதுதான் எனக்கு அன்றாட உணவு தருகிறது!”

“கடல் எத்தனையோ பேரை விழுங்கியிருக்கிறதே, உன் குடும்பத்தில் யாராவது கடலில் செத்திருக்கிறார்களா?”

“ஆமா!..... என் தகப்பன், தாத்தா, சித்தப்பா, மாமா.... இந்த நாலுபேரும் கடலில்தான் செத்தார்கள்!”

“உனக்குப் பயமில்லையா?.... கடலில் உன் உறவினர்கள் செத்திருந்தும், எப்படி நீ இந்தத் தொழில் செய்து கொண்டிருக்கிறாய்?”

படகோட்டி கேட்டார் - “உங்கள் குடும்பத்தில் பலரும் படுக்கையில்தானே செத்திருப்பார்கள்?.... அப்படியிருந்தும் பயமில்லாமல்தானே படுக்கையில் உறங்குகிறீர்கள்!”

பிறந்தால் சாவு நிச்சயம்.... ஏன் பயப்பட வேண்டும்?

## இருக்கும்போதே கொடு!

ஒரு பசுவும் ஒரு பன்றியும் நட்புறவோடு உரையாடின.

“பசுவே! உன்னைத்தான் எல்லாரும் பாராட்டுகிறார்கள். ....நீ ஒரே ஒரு குட்டி போட்டுப் பால் கொடுக்கிறாய். ....நான் பல குட்டிகள் போட்டுப் பால் கொடுக்கிறேன். ....உன்னைச் சிலர் கோமாதா என்று வணங்குகிறார்கள்! என்னை ஏன் அடித்துத் துரத்துகிறார்கள்?.... பன்றிகளை உணவாக உண்ணுகிறார்கள். ....எங்கள் ரோமத்தை பயன்படுத்துகிறார்கள். .....இருந்தும் எங்களுக்கு மரியாதை இல்லையே!” - புலம்பியது பன்றி.

செத்த பிறகுதான் நீ பயன்படுகிறாய். ...உயிரோடு இருக்கும்போதே நான் மனித குலத்திற்குப் பயன்படுகிறேன். ...பால், மூத்திரம், சாணம் எல்லாம் தருகிறேன்” என்றது பசு.

சொத்துச் சேர்த்து வைத்து வாழ்க்கையை அனுபவிக்காமலே ஒரு சிலர் மரணத்தை எதிர்கொள்கின்றனர். நல்ல முறையில் சம்பாதித்ததை நல்லவற்றுக்குப் பயன்படுத்தியதோடு நின்றுவிடாமல், நாலு பேருக்குக் கொடுத்துதவலாமே!

வாழும்போதே கொடுத்துப் பழகுவோம்... பொருளாக - உணவாக - நல்ல சொற்களாக - நம்மையே கையளிப்பதாக!



கலாபன் வாஸ்
94863 90793

பனிமய அன்னை 25

# பனிமய மாதா தங்கத் தேர் பவனி

**தங்கத் தேரின் 16-வது பவனி**

கடந்த 5-8-2022 நாளன்று, **பரிசுத்த பனிமய மாதா** திருவிழா சிறப்பு திருப்பலியில், தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் **மேதகு ஸ்டீபன் ஆண்டகை** அவர்கள், அடுத்த ஆண்டு 5-8-2023 நாளன்று, பரிசுத்த பனிமய அன்னையின் மகோன்னத தங்கத் தேர் 16-வது முறையாக சீர்பரவர் திருமந்திர நகராம் தூத்துக்குடி நகரில் வரவிருப்பதை, **'லோவாதோ சேஜா'** (Louada Seja) என்ற அன்னையின் தோத்திரப் பாடல் பாடப்பட்டு, பிரகடனம் செய்தார்கள்.

**லோவாதோ சேஜா**

Louado Seja, Louado Seja
O Santissimo Sacramento - Sacramento
Ea Immacula - de Con Ceicas
Da Virgem Maria Senhora Nossa
Concebida Sem Macula (2)
Do Peccato Original - Amen.

**தமிழாக்கம்**

பரிசுத்த திவ்விய நற்கருணை நாதரும்

ஜென்ம பாவ மாசில்லாமல் உற்பவித்த

அமலோற்பவ கன்னியாகிய நம் அன்னையும்

வாழ்த்தப்படுவார்களாக - ஆமென்.

பரிசுத்த பனிமய அன்னை திருவிழா பிரகடனம் ஆலயத்தில் வெளியிடும் காலங்களிலும், திருவிழா கொடியேற்ற நாளன்று நண்பகல் 12 மணிக்கு அன்னைக்கு பொன் மகுடம் அணிவிக்கும் வேளைகளிலும், இந்தப் போர்த்துக்கீசிய மொழிப் பாடல், அன்னைக்கு நன்றித் தோத்திரமாகப் பாடப்படுகின்றது.

**சீரமைக்கும் பணி**

சீரமைக்கும் பணியின் முதற்கட்டமாக, பனிமய அன்னையின் அற்புதத் தேர், நிறுத்தப்பட்டிருந்த தேர்ப்பறையில் இருந்து, செப்பனிடுவதற்காக கடந்த 9-10-2022 ஞாயிறன்று காலை 10 மணியளவில் வெளியே இழுத்து கொண்டு வரப்பட்டு, கோயில் வளாகத்தில் நிறுத்தப்பட்டது. எதிர் வரும் பத்து மாதங்களில் நூற்றுக்கும் அதிகமான தொழில்நுட்ப கலைஞர்களின் அயராத உழைப்பில், பனிமய அன்னையின் தங்கத் தேர் நுணுக்க வேலைப்பாடுகளுடன், எங்கும் காண்பதற்கரியதும், பொன்னுலகில் இருந்து இறங்கிய தேர் என இறும்பூது கொள்ளத் தக்கதுமாக மிளிரவிருக்கிறது.

**சித்திரப் பொற்றேர்**

பனிமய மாதாவின் சித்திரப் பொற்றேர் **'தங்கத் தேர்'** எனும் அதன் பெயர்க்கொப்ப எங்கணும் தங்கமே துலங்க, காண்பவரின் கண்களை ஈர்க்கும்.

இத்தேரில் முழுச் சுருபங்களாக **யூத மன்னர்கள்** பன்னிருவர், **நற்செய்தியாளர்கள்** நால்வர், சர்வேசுவரன் மேல் சிரசு பீடத்தில் **பரமபிதா**, மாடப்புறா ரூபத்தில் **தூய ஆவி, கடல் மனுஷ - மனுஷிகள்** மற்றும் **வானதூதர்கள்** சிறப்புறக் காணப்படுகிறார்கள்.

**இறைவனின் தாய்**

இறைவனின் புனித தாய், விடியலின் விண்மீன், பாவ இருளை அகற்றும் பாதுகாவலி என்பதை உலகிற்கு உணர்த்தும் வகையில், தங்கத் தேரின் உச்சப்பகுதியில் விடிவெள்ளியைப் போல ஐந்து முனைகளுடைய **பெரிய விண்மீன்**, அதற்கு கீழே சுழன்று கொண்டிருக்கும் 9 **பெரிய வெண்பொன் மீன்கள்**, விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசி என்பதை பறைசாற்றும் **பொன் மணிமகுடம்** அனைத்தும் அமைக்கப்பட்டிருக்கும்.

**பிதாவாகிய சர்வேசுரன்**

இவ்வுலகைப் படைத்த இறைவன் **"பிதாவாகிய சர்வேசுரன்"** முதியவர்





தோற்றத்தில் ஓர் சிறு அழகிய பீடத்தில் காட்சியளிக்க, சுற்றிலும் நான்கு பக்கத்திலும் இருபக்க உருவங்கொண்ட **நான்கு வானதூதர்கள்** பறந்த நிலையில் உள்ளனர்.

**தூய ஆவி**

இறைத்தந்தையின் பீடத்திற்கு கீழ் **பரிசுத்த ஆவியானவர்** வெண்புறா வடிவில் காட்சியளிக்க, இதனையெல்லாம் தாங்கும் வகையில் அன்னை மரியாள் பன்னிரு கோத்திரங்களின் தாய் மற்றும் திருச்சபையின் வச்சிரத்தூண் என்பதை நினைவூட்டும் வகையில், அடுக்கடுக்காக ஒரு சிறிய தூண், நடுத்தரத் தூண், பெரிய தூண் வீதம் நான்கு பக்கமும் **பன்னிரு தூண்கள்** மிக நுண்ணிய வேலைப்பாடுகள் நிறைந்து காணப்படும்.

**பனிமய அன்னை**

தங்கத் தேரின் நடுப்பகுதியில் சித்திர வேலைப்பாடுகள் சிறப்புடன் செய்யப்பட்ட அழகிய பீடத்தில், **பனிமய அன்னை**யின் அற்புதத் திருச்சுருபம், இடக்கரத்தில் குழந்தை வடிவில் **இறைமகன் இயேசு** அமர்ந்து அருள்பாலிக்க, தெய்வீக காட்சியளிக்கின்றது.

அன்னையைத் தாங்கும் பீடத்தின் மேல் பகுதி வளைவின் முனைகளில் குழந்தை உருவில் இரு **வானதூதர்கள்** என நான்கு பக்கங்களிலும் எட்டு வானதூதர்கள் அமைந்துள்ளனர்.

**பன்னிரு வேந்தர்கள்**

மாதாவின் படத்தின் கீழ் பகுதியில் பனிமய அன்னையைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் **தாவிது அரசர்** முதல் இயேசு பாலனைக் காண வந்த **மூன்றரசர்கள்** உட்பட **பன்னிரு வேந்தர்கள்** சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ளனர்.

வேந்தர்கள் நிற்கும் அகன்ற பீடப் பகுதியின் கீழ் நான்கு மேல் முனைகளிலும் நான்கு கிளிகளின் தலைகள் அழகாகச் செதுக்கப்பட்டிருக்கும்.

**பன்னிரு புனிதர்கள்**

கீழ் பக்கத்தில் மூன்று புனிதர்கள் என நான்கு பக்கங்களில் **பன்னிரு புனிதர்**களின் உருவங்கள் உண்டு. அதில் நற்செய்தியாளர்கள் நால்வரும், புனிதர்கள் சவேரியார், இஞ்ஞாசியார், தோமையார் ஆகியோர் இடம் பெறுவர்.

இடுப்பிற்கு மேல் பாகம் மனித உருவமும் கீழ் பாகம் மீன் வடிவமுங்கொண்ட **கயல் கன்னியர்** இருவர், **கயல் காளையர்** இருவர் என நால்வர் நான்கு திசை நோக்கிக் கைகூப்பிய வண்ணம் வணங்கி நிற்பர்.

**தங்கத் தேர்**

நான்கு பெரிய சக்கரங்களும், நடுவில் இரு சிறு சக்கரங்களும் கொண்ட இந்தத் தேர் சுமார் 3½ டன் எடை கொண்டு, மூன்று புதிய அச்சுகள் (Axles) உதவிகொண்டு இயக்கப் படுகிறது.

தங்கத் தேரை இழுக்கும் கயிற்றின் அகலம் அரை அடி, நீளம் ஐம்பது அடிகள். முன்னும் பின்னும் இக்கயிறுகளைக் கொண்டுதான் அன்னையின் பொற்றேர் இழுத்துச் செல்லப் படும். **மரியே வாழ்க!**



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**

நம் திருஅவை, நமது பெருமை - 12

# நேர்த்தியான நிறுவனம்!



கத்தோலிக்கத் திருஅவையைப் பல்வேறு பார்வைகளில் நோக்கலாம். இறையியல் பார்வையில் அது இறைமகன் இயேசு தோற்றுவித்த சீடர்களின் ஒன்றிப்பு. ஆனால், மானிடவியல் பார்வையில் அது ஒரு மாபெரும் நிறுவனம் (institution). நிறுவனம் என்னும் பார்வையில் நோக்கினாலும், கத்தோலிக்கத் திருஅவை நம்மை வியக்க வைக்கிறது. காரணம், 21 நூற்றாண்டுகளாக சீரோடும், சிறப்போடும், கட்டுக்கோப்போடும் இயங்கி வரும் வேறு ஒரு நிறுவனம் உலகில் இல்லை.

திருஅவையின் அமைப்பு முறையையும், அது இயங்கி வரும் தன்மையையும் பார்த்து அறிஞர்களே வியக்கின்றனர். அதனை ஒரு நிறுவன மாதிரியாகவும் பார்க்கின்றனர் என்பது நமக்கெல்லாம் வியப்புதானே!

**1. அமைப்பு முறை :** கத்தோலிக்கத் திருஅவை ஒரு வாரிசு அமைப்பு அல்ல. திருத்தந்தை புனித பேதுருவின் வாரிசு என்று அழைக்கப்படுகிறார். ஆனால், இங்கே வாரிசு முறையில்லை, வாரிசு நியமனமுமில்லை. திருத்தந்தையோ, எந்தவோர் ஆயரோ தமது வாரிசாக எவரையும் நியமிப்பதில்லை.

அதே வேளையில், திருஅவை ஒரு சனநாயக அமைப்பும் அல்ல. இங்குள்ள ஆயர்கள், கர்தினால்மார்கள் எவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. திருத்தந்தையால் நியமிக்கப்படுகிறார்கள். எந்தப் பங்குத் தந்தையையும் பங்கு மக்கள் தேர்ந்தெடுப்பதில்லை, அவர் ஆயரால் அனுப்பப்படுகிறார். இந்த நியமன முறை இத்தனை நூற்றாண்டுகளாக எந்த சிக்கலுமின்றித் தொடர்ந்து வருகிறது.

அதே வேளையில், திருஅவை ஒரு சர்வாதிகார அமைப்பும் அல்ல. திருத்தந்தை கர்தினால்மார்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இந்தத் தேர்வு முறையும் எந்த தடையுமின்றிக் காலங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதைப் பார்த்து உலகமே வியக்கிறது.

ஆக, முழுக்க சனநாயகமும் இல்லாமல், சர்வாதிகாரமும் இல்லாமல் ஆனால் பெரிய சிக்கல்கள் எதுவுமின்றி 20 நூற்றாண்டுகளைக் கடந்திருக்கிறது கத்தோலிக்கத் திருஅவை. எந்த ஒரு அரசாட்சியோ, மன்னர் பரம்பரையோ, ஆட்சிமுறையோ, சமயமோ, சமூக அமைப்போ செய்திராத ஒரு சாதனை இது. இது நமக்குப் பெருமைதானே!

**2. உள்கட்டமைப்பு :** உலகம் முழுவதும் பரவியிருக்கும் கத்தோலிக்கத் திருஅவையின் உட்கட்டமைப்பு முறை பலருக்கும் வியப்பையும், பொறாமையையும் ஒருசேரத் தந்திருக்கிறது.



வத்திக்கானைத் தலைமையகமாகக் கொண்டுள்ள திருஅவை அனைத்து நாடுகளிலும் மறைமாவட்டங்கள் என்னும் அலகுகளால் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மறைமாவட்டமும் பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உலகில் எத்தனை மறைமாவட்டங்கள், எத்தனை பங்குகள், அவற்றில் பணியாற்றும் குருக்கள், துறவியர் எத்தனை பேர், பங்குகளிலுள்ள இயக்கங்கள், சபைகள் எத்தனை என அனைத்தும் துல்லியமாகக் கணக்கிடப்பட்டுள்ளன.

இன்றைய நாளில் உலகில் **2248 மறைமாவட்டங்கள்** உள்ளன. இந்தியாவில் 174 மறைமாவட்டங்களும், தமிழகம் - பாண்டிச்சேரியில் 21 மறைமாவட்டங்களும் உள்ளன. ஒவ்வொரு பங்கிலும் ஆண்டுதோறும் எத்தனை பிறப்புகள், எத்தனை இறப்புகள், எத்தனை திருமணங்கள்... இவையும் வெகு துல்லியமாகப் பதிவு செய்யப்படுகின்றன. இன்றுள்ள கணினியோ, இணைய தளமோ இல்லாத காலத்திலிருந்தே இந்தத் தரவுகள் நேர்த்தியாகப் பேணப்பட்டு வருகின்றன என்பது மிகப் பெரிய சாதனை!

**3. திருஅவைச் சட்டம் :** திருச்சபைச் சட்டம் (Canon Law) என்பது இன்னொரு வியப்பான பெருமை. உலகம் முழுவதும் பரவியிருக்கும் திருஅவை ஒரே சட்டத்தால் ஆளப்படுகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் திருத்தியமைக்கப்பட்டு 1983ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

மொத்தம் 1752 சட்டப் பிரிவுகளைக் கொண்ட திருஅவைச் சட்டம் திருஅவை அதிகாரிகள், இறைமக்கள், துறவிகளின் உரிமைகள், கடமைகள் போன்றவற்றை மிக விளக்கமாக எடுத்துரைக்கிறது. திருஅவையின் நிதி நிர்வாகம், நிறுவன நிர்வாகம், பள்ளிகள், குருமடங்கள், பங்குகள் எப்படி நிர்வகிக்கப்பட வேண்டும் என்பனவற்றைத் தெளிவாகச் சொல்கிறது. அருளடையாளங்கள் எப்படி வழங்கப்பட வேண்டும் எனக் கற்பிக்கிறது. இந்தச் சட்டங்களை மீறுவோருக்கு என்ன தண்டனை என்பதையும் விவரிக்கிறது.

இந்தச் சட்டங்கள் கடைப்பிடிக்கப் படுவதைக் கண்காணிக்கவும், சட்ட மீறல்களை விசாரணை செய்யவும் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் முதன்மைச் செயலாளர் (Chancellor) இருக்கின்றார், சட்ட வல்லுனர்கள் இருக்கின்றனர், மறைமாவட்ட நீதிமன்றமும் இயங்குகின்றது. திருஅவையின் தலைமை நீதிமன்றம் உரோமையில் இயங்குகின்றது.

தொடரும்...

**“கிறிஸ் மிலியன்”**



## தூய பனிமய அன்னைப் பேராலயம், தூத்துக்குடி

# தூத்துக்குடி மறைமாவட்ட அளவில்

# கூட்டுத் திருமண விழா

**ஆகஸ்ட் 20, 2023**

தூத்துக்குடி மறைமாவட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இறைவனுக்கு நன்றியாகவும், பனிமய அன்னைக்குப் புகழ்ச்சியாகவும் பனிமய அன்னைப் பேராலயப் பங்கின் சார்பாக, இறைவனுக்குத் திருவுளமானால், **2022 மே மாதம்** தூத்துக்குடி மறைவட்ட அளவிலும், **2023 ஆகஸ்ட் மாதம்** மறைமாவட்ட அளவிலும் கூட்டுத் திருமணங்கள் நடத்துவது என முடிவெடுக்கப்பட்டு, கடந்த 08.05.2022 அன்று 14 மணஇணையர்களுக்கு மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை அவர்களின் தலைமையில் கூட்டுத் திருமண விழா சிறப்பாக நடந்தேறியது.

அதைத் தொடர்ந்து, எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் எதிர்வரும் **20.08.2023 ஞாயிறு மாலை 04.00 மணி**க்கு பனிமய அன்னைப் பேராலயத்தில் மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்களின் தலைமையில் **தூத்துக்குடி மறைமாவட்டத்தைச் சேர்ந்த 119 பங்குகளிலிருந்தும் 25 மண இணையர்களுக்கு** திருமணத் திருவருள்சாதனத் திருப்பலி நிறைவேற்றப்படும். அதற்கான பரிந்துரைக் கடிதங்களைப் பங்குத் தந்தையரிடமிருந்து வரவேற்கிறோம்.

**1. யார் இந்தத் திருமண விழாவில் கலந்துகொள்ளலாம்?**

ஆடம்பரமும், பகட்டுமின்றி எளிமையாகத் திருமணம் நடத்த விரும்புகிறவர்கள், எளிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், பெற்றோரை அல்லது தந்தையை இழந்த இளம்பெண்கள் ஆகியோர் இந்த விழாவில் திருமணம் செய்துகொள்ளத் தகுதியானவர்கள்.

**2. கூட்டுத் திருமண மண இணையர்கள்** (ஜோடிகள்) **என்ன பெறுவார்கள்?**

1. **3 பவுனில் திருமாங்கல்யம்** (முக்கால் பவுனில் தூய ஆவியார் உருவம், இரண்டே கால் பவுனில் சங்கிலி)
2. மணமக்களுக்கு வேட்டி, சட்டை, சேலை


3. ஸ்டீல் கட்டில்
4. பீரோ
5. பெட் ஷீட், தலையணை
6. சமையல் பாத்திரங்கள்
7. ஒவ்வொரு ஜோடிக்கும் 50 பேருக்கு சாப்பாடு

இவை தவிர, பேன்ட் செட், ஒலி அமைப்பு, ஜோடனை, திருமண அழைப்பிதழ்கள் போன்ற பொதுச் செலவுகளும் பேராலயத்தால் ஏற்கப்படும். இதற்கெனப் பங்குத் தந்தையின் தலைமையில் ஒரு சிறப்புக் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

### 3. இத்திருமணத்தில் சேர என்ன செய்ய வேண்டும்?

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் பங்குத் தந்தையரை அணுகி, **பங்குத் தந்தையின் பரிந்துரைக் கடிதம்** பெறவேண்டும். ஒரு **பங்கிலிருந்து** ஒரு **ஜோடி மட்டுமே** தேர்ந்தெடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான சிறப்பு கூட்டம் 2023 மே மாதம் நடைபெறும்.

கூட்டுத் திருமணம் பேராலயத்தில் நடந்தாலும், அவரவரின் சொந்த ஊர்களில் திருமண வரவேற்பு நிகழ்வை வைத்துக்கொள்ளலாம். ஆனால், வெடி போடுதல், செண்டை மேளம் போன்ற பகட்டான, தேவையற்ற செலவினங்கள் தவிர்க்கப்படும் என்றும், திருமணத்திற்குப் பின் பெண் வீட்டாரிடமிருந்து சீதனம் கேட்க மாட்டோம் என்றும் உறுதியளிக்க வேண்டும். கூடுதல் விபரங்களுக்குப் பனிமய அன்னைப் பேராலய அலுவலகத்தை அணுகவும்.



**கூட்டுத் திருமண விழாவுக்கு**
**நன்கொடை அனுப்ப விரும்புபவர்கள்**
**பின்வரும் வகையில் பணம் அனுப்பலாம்**



**BANK DETAILS :**

BANK NAME : INDIAN BANK CC A/c, A/c No. : 7297582975, IFSC CODE : IDIB000T058
A/c NAME : OUR LADY OF SNOWS BASILICA UNIT NO 60 GOLDEN CAR 2023

**அருள்பணி. குமார்ராஜா**
*94431 47823*

# விவிலியப் போட்டி 94

தயாரித்தவர் :
சகோ. பிரகாசி FBS

**சீராக்கின் ஞானம் அதிகாரம் 6 முதல் 8 வரை**

**ஓரிரு வார்த்தையில் விடையளி :**

1. எது நண்பர் தொகையைப் பெருக்கும்?.
2. எந்தப் பழக்கம் நன்மை தராது?
3. நம்பிக்கைக்குரிய நண்பர்கள் எவற்றைப் போன்றோர்கள்?
4. யாரைக் கண்டு மகிழக்கூடாது?
5. யாருடைய உரைகளை புறக்கணிக்கக் கூடாது?
6. யாருக்கு மிகுதியாக செல்லம் கொடுக்கக் கூடாது?
7. யாரைப் பெருமைப்படுத்த வேண்டும்?
8. யாருக்கு தாராளமாக கொடுக்க வேண்டும்?

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**நவம்பர் : இறந்தோரை நினைவுகூர்ந்து செபிப்போம்.**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.11.2022**

## விவிலியப் போட்டி 93

**அக்டோபர் 2022 விடைக்குறிப்புகள்**

**சீராக்கின் ஞானம் அதிகாரம் 1 முதல் 5 வரை**

**அன்னையின் அணிகலன்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அன்பு | சீஞா 4:10 |
| 2. | அமைதி | சீஞா 1:23 |
| 3. | பொறுமை | சீஞா 5:4 |
| 4. | மகிழ்ச்சி | சீஞா 1:23 |
| 5. | நம்பிக்கை | சீஞா 5:8 |
| 6. | பரிவு | சீஞா 5:15 |
| 7. | உதவி | சீஞா 4:3 |
| 8. | இறைப்பற்று | சீஞா 1:25 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :

**93458 16875**

அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 174**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**
**சரியான விடை எழுதியவர்கள் : 110**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

## பரிசு பெறுபவர்கள் : 4

1. புனித அந்தோனியார் அன்பியம் **இருதயம்மாள் கபிரியேல்**
2. அன்னை தெரசா அன்பியம் **சுரேஷ் பிரேமா**
3. அன்னை வேளாங்கன்னி அன்பியம் **குருஸ் ஷாலினா**
4. கிறிஸ்து அரசர் அன்பியம் **ஃப்ளோரிடா எமிலியன்**

## பாராட்டுக்குரியவர்கள் : 106

5. அருள்சகோ. ரோசம்மாள்
6. அருள்சகோ. லீமா

**அந்தோனியார் அன்பியம்**
7. சரோஜா
8. பிருந்தா சார்லஸ்
9. ஜெயா
10. லூக்காஸ் சகாயம்
11. ரீனா மொறாயிஸ்

**அன்னை தெரசா**
12. சுகன் மோனிஷா
13. ஜூலியட் ஜெயரூபி
14. ரெய்சா சுஜய்
15. நமீஷா

**அன்னை வேளாங்கன்னி**
16. டென்சி
17. ரிஷாலின்

**கிறிஸ்தரசர்**
18. செலஸ்கி கிளமென்ட்
19. ரெக்ஸ் கிரீன்வெல்
20. ஜூலியட் சாவியோ
21. சாஃப்ரா ரோட்ரிக்ஸ்

**தஸ்நேவிஸ் மாதா**
22. ஜெனிட்டா

**திவ்யபாலன் அன்பியம்**
23. சகாயராணி தனராஜ்
24. பிரின்சி

**பாத்திமா மாதா**
25. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
26. ஜெசிந்தா கான்ஸ்டன்
27. ஸ்;டெஃபி
28. மைக்கேல் ஜெனிட்டா
29. ராஜ ரீனோ

**இரக்கத்தின் மாதா**
30. சித்ரா மோத்தா
31. இருதயம்மாள் கொன்சால்
32. பிரைட்டன் ஜெரோஃபின்

**ஜெபமாலை மாதா**
33. சகாயம்மாள் பெனடிக்ட்
34. கல்யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
35. டெரன்சியா அரிஸ்டோ
36. அந்தோனிசாமி
37. அக்ஷல்
38. ட்ரைபேனா

**காவல்தூதர்**
39. வெனிட்டாள்
40. ஜெயா அகஸ்டின்
41. சாந்தி ஆல்ட்ரின்
42. ட்ரினிஷா
43. செகரியா இம்மானுவேல்
44. சார்லட்
45. ஆரோக்கிய டெய்சி

**குழந்தை தெரசா**
46. கிறிஸ்டி லிஸ்டன்
47. ஷோபனா கோமஸ்
48. பெனி மொறாயிஸ்
49. பெர்லி டென்சன்

**குழந்தை இயேசு**
50. மோனிகா செபாஸ்டின்
51. எமல்டா
52. அந்தோனியப்பா பிச்சம்மாள்

**லூர்து மாதா**
53. ஃபிலோ கோமஸ்
54. ஜெனோ சேவியர்
55. ரம்யா
56. ரோஸ்லின் தாமஸ்
57. ஆலிவர் வி.ராயன்
58. சகாயராணி
59. ரஜூலா
60. சுதர்ஜி ஆர்த்தி

**மணல் மாதா**
61. கெயிட்டன் ஃபர்னான்டோ
62. ரொசாரி கோமஸ்
63. ரொசாரி ரசிகா

**மிக்கேல் அதிதூதர்**
64. எல்சிட்டா
65. வினோ அந்தோனி

**பனிமய அன்பியம்**
66. மெர்சி கோமஸ்
67. ஜூடு ரதி
68. ஆனி ஜெசிந்தா

**பவுலடியார்**
69. லீமாரோஸ் ஜாய்
70. ராஜா ரோஸ்லின்
71. ரஸ்கின் வசந்தா
72. ஜான்சன் ஒஃபிலியா

**பரிபூரணமாதா**
73. ஜெனிஷா
74. மெடோனா

**பொம்பெயி மாதா**
75. லூடா கான்ஸ்டன்
76. மாத்யூ கர்டோசா
77. தெரசா பிரகாஷ்
78. இம்மாக்குலேட்
79. ஜான்சி ராணி
80. டிஃபானி அண்டோ
81. டயானா கோமஸ்

**இராயப்பர்**
82. ஷைனி
83. நேவிசம்மாள்
84. ஜெசிமா கிளாரன்ஸ்
85. டெய்சி

**சவேரியார்**
86. டெலிலா அமலன்
87. ஆரோக்கியராஜ் ஹெலினா
88. ஜோர்னல் ஜென்சி
89. அனுஷ்யா பீட்டர்
90. ரூபா மனுவேல்
91. பிரின்சி ஆக்னல்
92. சகாயம் ஆண்டன்

**செபஸ்தியார்**
93. பிரவீனா
94. ஜெசிலா சேவியர்

**சிந்தாத்திரை மாதா**
95. நேசம்
96. ஜூடி ஆரோக்கியராஜ்
97. டிஜேபிஆர் இராயன்
98. மெடோனா ஜோசப்

**சிறுமலர் அன்பியம்**
99. செலஸ்டின்
100. விஜி சகாயராஜ்
101. எல்சிற்றா ஆனந்த்

**சூசையப்பர்**
102. ரூபி கொர்னேலியுஸ்
103. மென்சி
104. கிறிஸ் ரிஜோ
105. ஜூடி கெஜேந்திரன்
106. ஹேமா

**திருச்சிலுவை**
107. சரோலின் கில்டன்
108. மேரி கிரேட்டா

**வியாகுல மாதா**
109. கெலிண்டன்
110. ராஜா ஜரின்

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 64

### பரிசு பெறுபவர்கள் : 4

111. சேலம் **சூசைராஜ்**
112. தூத்துக்குடி இஞ்ஞாசியார்புரம் **சகாய ஷீலா**
113 பாம்பன் **சுதா**
114. வேம்பார் **ஆனி பிரான்சியோ**

### பாராட்டுக்குரியவர்கள் : 60

**ஆலந்தலை**
115. ஃபொன்சேகா
116. மரியம்மாள்
**வீரபாண்டியன்பட்டணம்**
117. ஆன்ட்ரின் சில்வேரா
118. ஷாந்தினி
**ஆறுமுகனேரி**
119. தொம்மை அந்தோனி
**சேதுக்குவாய்த்தான்**
120. ஞானம் பாலசிங்
**புதியம்புத்தூர்**
121. ஹெலன் அன்னமணி
**சென்னை**
122. கமலஜோதி ஜெயசீலன்
123. சகாயராணி
**பாளையங்கோட்டை**
124. பிரேமா குணசீலன்
125. டெனிசா ஃபர்னான்டோ
126. சுவர்ணா
127. ரோசி
**கயத்தாறு**
128. அமல்ராஜ்
**உரியூர்குப்பம்**
129. சகோ. லெட்டீசியா
**பெரியகுளம்**
130. குழந்தை தெரஸ்
**திண்டுக்கல்**
131. ரொசாலி
132. மரிய மதலேன்
133. ஜெர்மேன்
**கோயம்புத்தூர்**
134. சகோ. லூக்காஸ்
135. ஆஷா தனசீலன்
**திருமானூர், கும்பகோணம்**
136. பீட்டர்
**அரக்கோணம்**
137. குமாரி சந்திரசேகர்
**திருச்சி**
138. மோனிட்டா கிறிஸ்டி
139. மேத்யூ விவேக்
140. டோனி
**மதுரை**
141. சகோ. அப்போலின்
**வடக்குத்து**
142. ஹென்றிதாஸ்
**பாம்பன்**
143. சுதா

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
144. பெனிட்டா
145. சுசீலன்
146. ரமோலா கமிலஸ்
147. ரிமோல்டா
148. ஜூலியட் வாஸ்
149. எல்சி
**குருஸ்புரம்**
150. ஆசீர்வாதம்
151. பிளசி செல்வராஜன்
152. தமிழ்ச் செல்வன்
153. பௌவுசி ஜோ மைக்கேல்
154. ஜான்சி மெண்டிஸ்
**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
155. சுகிர்தா
**யூதா ததேயு கோவில்**
156. ரோஸ் சேவியர்
157. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்
**காந்திநகர்**
158. சாந்தினி
159. ரியாலினோ
160. பேபி வால்டர்
161. அன்சிட்டா
162. பிண்டன் சோபியா
163. அனிதா
**லூர்தம்மாள்புரம்**
164. ரெனிஸ்டன் ஜெர்லின்
**சார்லஸ் கோவில்**
165. சகாயிற்றா மச்சாது
**அன்னை வேளாங்கன்னி கோவில்**
166. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்
167. செக்கரியா சாமுவேல்
168. லிஜியா ஃபர்னான்டோ
**இஞ்ஞாசியார்புரம்**
169. அற்புத செல்வி
170. சூசை நவீன்
**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
171. விர்ஜின்
172. தயாபர ராணி
**அந்தோனியார் கோவில்**
173. சுஜாதா மகேஷ்
**பெத்தனி கான்வென்ட்**
174. சகோ. ஜெமினா



**கடந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 165**

**இந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 174**

**மாதம் ஒரு மாதா படம் : 34**

# அமைதி தரும் அன்னை!



**சாஃப்ரா ரொட்ரிகஸ்**
கிறிஸ்தரசர் அன்பியம்

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 40)

**நவம்பர் - 2022**

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி பால் ரோமன் | 94889 42202 |
| களப் பணியாளர் | : | சகோதரர் பெல் கிளிண்டன் | 9345816875 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை 5.00, 6.30, 8.00 | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை 9.30 | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை 5.30 | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை 6.30 | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்

உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.30 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.

## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

401. தங்கத் தேர் செப்பனிடும் பணிகளுக்காகப் பேராலய வளாகத்தில் தேர் ஆயத்தக்கூடம் கட்டுவதற்கான பனை மரங்கள் நடும் பணி 01.10.2022 முதல் சனியன்று காலையில் பங்குத் தந்தையின் இறைவேண்டலுடன் தொடங்கியது.

402. தங்கத் தேர் 2023ன் ஆசிர்வாதங்களுக்காக பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையின் முன்னெடுப்பில் கடந்த **08.10.2022** இரண்டாம் சனியன்று இரவு 10.00 முதல் அதிகாலை 05.00 வரை **முழு இரவு தொடர் செபமாலை** நடைபெற்றது. நமது பங்கிலிருந்தும், மாநகரின் பிற பங்குகளிலிருந்தும் திரளான மக்கள் பங்குபெற்றனர்.

403. தேர்ப் பராமரிப்புப் பணிகளுக்காகத் தங்கத் தேரை தேர்ப்பிறையிலிருந்து இழுத்து வந்து பேராலய வளாகத்திலுள்ள தேர் ஆயத்தக் கூடத்தில் நிறுத்தும் திருப்பவனி 09.10.2022 ஞாயிறு காலை 10.30 மணிக்கு நடைபெற்றது. திரளான மக்கள் கலந்துகொண்டு வடம் பிடித்து இழுத்து தேரை ஆயத்தக் கூடத்திற்குள் கொண்டு நிறுத்தினார்கள்.

404. பங்குத் தந்தை அருள்பணி. குமார்ராஜாவின் **34ஆம் அருள்பொழிவு நாளை** முன்னிட்டு 09.10.2022 ஞாயிறு மாலை 04.00 மணிக்குப் பேராலய ஊழியர்கள் மற்றும் பங்கின் எளிய குடும்பங்கள் என மொத்தம் 34 பேருக்கு ரூ. 60,000 மதிப்புள்ள வீட்டு உபயோகப் பொருள்கள் வழங்கப்பட்டன.

405. அருள்பணி. குமார்ராஜாவின் அக்கா அருள்சகோ. ரொசாரியோ FMM அவர்களின் **துறவறப் பொன்விழா** நமது பங்கில் 10.10.2022 திங்கள் மாலை 05.30 திருப்பலி அருள்சகோதரிகளின் அர்ப்பணத் திருப்பலியாகக் கொண்டாடப்பட்டது. 25 அருள்சகோதரிகள் திருப்பலியில் பங்குபெற்றனர். தொடர்ந்து நடைபெற்ற விழாவில் அனைவருக்கும் நினைவுப் பரிசுகளும், விருந்தும் வழங்கப்பட்டன.

406. பேராலயத்தின் முன்னாள் அதிபர், பங்குத் தந்தையான அருள்பணி. ஜோசப் இரத்தினராஜ் அவர்களின் குருத்துவப் பொன்விழா 11.10.2022 செவ்வாய் மாலை 05.30 திருப்பலியில் கொண்டாடப்பட்டது. பல அருள்தந்தையர்கள் இத்திருப்பலியில் கலந்துகொண்டனர். பங்கு மக்களின் சார்பாக பனிமய அன்னையின் திருவுருவப் படம் தந்தை அவர்களுக்கு வழங்கப்பட்டது.

407. தெற்கு எம்பரரர் தெருவில் உள்ள **புனித பாத்திமா அன்னையின் கெபியில்** 12.10.2021 செவ்வாய் மாலையில் அருளிக்க ஆசீரும், 13.10.2021 புதன் காலை 07.20க்குத் திருவிழாத் திருப்பலியும், அன்று இரவு 08.00 மணிக்கு சப்பரப் பவனியும் நடைபெற்றன.

408. 15.10.2022 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (24)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. “அருள்பணியாளர்களுக்காக” நடைபெற்ற இவ்வழிபாட்டில் தூத்துக்குடி மறைமாவட்ட அருள்பணியாளர்கள் மற்றும் உலகெங்கும் திருப்பணியாற்றும் அனைத்து அருள்பணியாளர்களுக்காகவும் சிறப்பு மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

409. புனித **யூதா ததேயு** திருத்தலத்திற்குத் திருப்பயணமாக 25.10.2022 செவ்வாய் அன்று மாலை நமது பங்கிலிருந்து திருக்குடும்ப சபையினரும், அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரும் பங்கின் சார்பாகத் திருப்பயணமாகச் சென்று திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

410. **நற்செய்தி அறிவிப்புக் காணிக்கை** உறைகள் வழக்கம்போல இந்த ஆண்டும் அன்பிய வழிகாட்டிகள் வழியாகக் கொடுத்துவிடப்பட்டன. கடந்த ஆண்டுகள் போலவே, இந்த ஆண்டும் தாராளமாகக் காணிக்கை தருமாறு பங்கு மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வாழ்த்துகின்றோம்*

### I. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 125. | ஜெரிக் சில்வான் | ஜென்சன் - ஜெரினா | 01.10.2022 | குழந்தை இயேசு |
| 126. | ஜெனிஸ் கிரிசோ | ஜென்சன் - ஜெரினா | 01.10.2022 | குழந்தை இயேசு |
| 127. | ஆண்டனி ஆலன் | மிக்கேல் - பிரிஜிட் | 05.10.2022 | இரக்கத்தின் மாதா |
| 128. | ஷெர்லின் சுந்தரி | ஜினோ - பிரின்சி | 08.10.2022 | அன்னை வேளாங்கண்ணி |

## நடைபெற இருப்பவை

- ★ **இறந்த நம்பிக்கையாளர் நினைவுநாள்:** 02.11.2022 புதன் அன்று நம் பேராலயத்தில் 05.00, 05.45, 06.30, 07.15 ஆகிய நேரங்களில் திருப்பலி நடைபெறும்.
- ★ **முதல் வியாழன் திருமணி ஆராதனை** 03.11.2022 வியாழன் மாலைத் திருப்பலி முடிந்ததும் நடைபெறும். தொடர்ந்து, ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்படும்.
- ★ 04.11.2022 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ 05.11.2022 முதல் சனி அன்று மாலையில் **சப்பரப் பவனி**யும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ 19.11.2022 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (25)** நண்பகல் 12.30 முதல் பிற்பகல் 03.00 வரை "**வேலை வாய்ப்புக்காகக் காத்திருப்போருக்காக**" நடைபெறும்.
- ★ **தொடர் நற்கருணை ஆராதனை:** கிறிஸ்து அரசர் பெருவிழாவை முன்னிட்டு 20.11.2022 ஞாயிறு பகல் முழுவதும் நடைபெறும்.
- ★ புனித செசிலியாவின் திருவிழாவை முன்னிட்டுப் **பாடகர் குழுவினர், திரைக் குழுவினருக்கான ஒன்றுகூடல்** 20.11.2022 ஞாயிறு மாலை 06.45க்கு நேவிஸ் அரங்கில் நடைபெறும்.

### திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.



| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 101. | 08.11.2022 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | உத்தரிக்கும் நிலை |
| 102. | 15.11.2022 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | இறப்பு |
| 103. | 22.11.2022 | செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் | இறுதித் தீர்ப்பு |
| 104. | 29.11.2022 | செவ்வாய் | அருள்பணி. ஜெரால்டு ரவி | விண்ணகம் - நரகம் |
| 105. | 06.12.2022 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | இரண்டாம் வருகை |



# தூய பனிமய அன்னைப் பேராலயம்

### தூத்துக்குடி



## எஸ்கலின் திருப்பயணிகள் இல்ல முன்பதிவு!

அடுத்த ஆண்டு (2023) தங்கத் தேர்ப் பெருவிழாவின்போது எஸ்கலின் திருப்பயணிகள் இல்லத்தில் தங்க விரும்புவோர் இப்போதே பணம் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளலாம்.

★ பெருவிழாவின் 11 நாள்களும் முன்பதிவு செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். வெளிநாடு, வெளிமாநிலம், சென்னை ஆகிய தொலைவிலிருந்து வருவோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

★ *ஏழு AC அறைகளுக்கு ஒருநாள் காணிக்கை ரூ. 2000*


★ *14 AC இல்லா அறைகளுக்கு ஒருநாள் காணிக்கை ரூ. 1000*

★ முன்பதிவு செய்ய விரும்புவோர் நவம்பர் 1 முதல் 5 வரை 97912 53474 என்னும் எண்ணுக்கு வாட்ஸ் அப் வழியாகத் தங்கள் பெயர், ஊர், எத்தனை அறைகள், எத்தனை நாள்கள் ஆகிய விபரங்களை அனுப்பி வையுங்கள். விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படுவோருக்குத் தகவல் தரப்படும். வங்கி வழியாகப் பணம் செலுத்தி, ரசீது பெற்றுக்கொண்டதும் முன்பதிவு உறுதி செய்யப்படும். செலுத்தப்பட்ட பணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

**அருள்பணி. குமார்ராஜா**
பங்குத் தந்தை

# விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி

**41ஆம் ஆண்டு** **11ஆம் ஆண்டு**



## M. மர்ஸ்லின்

பிறப்பு : 06.06.1922
இறப்பு : 15.11.1981

## M. சேசம்மாள்

பிறப்பு : 15.12.1932
இறப்பு : 28.06.2011

**திருப்பாடல் 116:15 - ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு**

ஆண்டவருடைய அடியார்களின் சாவு அவர்களை ஆண்டவருடைய அடிகளில் சேர்த்தலால் அம்மரணத்தை அற்பமானதாகக் கருத இயலாது. அவர்களுடைய இறப்பே அவர்களுடைய மகிமையென்ற பொருளில் அவ்விறப்பு இறைவன் முன்னிலையில் மதிப்பிற்குரியது.

**மகன், மகள்கள், மருமக்கள், பேரன்கள், பேத்திகள்**
**பூட்டன்கள், பூட்டிகள் மற்றும் குடும்பத்தினர்**


**46C/1A, SOUTH EMPEROR STREET, THOOTHUKUDI - 628 001.**

# 16ஆம் நாள் நினைவஞ்சலி

"நீர் தேர்ந்தெடுத்து உம் அருகில் வைத்துக்கொள்ளும் மனிதர் பேறுபெற்றோர்"
(திபா 65:4)







மண்ணில்
05.06.1933

விண்ணில்
21.10.2022

# செலின் பர்னாண்டோ

வயது : 89

*பிரிவின் துயரால் வாடும்*

மகன் : **ஏர்னஸ்ட் மிசியார்** மகள் : **ஈவ்லின் மிசியார்**

மற்றும்

மருமக்கள், பேரன்கள், பேத்தி

*நினைவுத் திருப்பலி :*

**05.11.2022 காலை 6.30 மணி**

**தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி**

59, தெற்கு எம்பரார் தெரு, தூத்துக்குடி - 628 001.

# ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"ஆண்டவரை உயிர்த்தெழச் செய்த கடவுள்
தம் வல்லமையால் நம்மையும் உயிர்த்தெழச் செய்வார்."

(1கொரி 6:14)



# P. சூசையம்மாள் பர்னாந்து

**தோற்றம் : 07.03.1953** வயது : 69 **மறைவு : 15.11.2017**

பாசத்தோடு பெற்றெடுத்து பணிவையும் பாசத்தையும் எமக்குணர்த்தி
உழைப்பால் எமை உயர்த்தியவர்களே நீங்கள் இறைவனில்
என்றென்றும் மகிழ்ந்திட வேண்டுகிறோம்.

மிகவும் மதுரமான இயேசுவே!
வாழ்நாளெல்லாம் உமது அன்பில் மகிழ்ந்து வாழ்ந்த **சூசையம்மாள் பர்னாந்து**
அவர்களின் ஆன்மா விண்ணரசில் நித்திய பேரின்பத்தில் மகிழ்ந்து வாழ அருள்புரியும்.

*பிரிவால் வருந்தும்*

**கணவர் : J. பீட்டர் பர்னாந்து**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

1, சவேரியா பிச்சை லேன்,
மாதா கோவில் காம்பவுண்ட், தூத்துக்குடி.

SHINY Ph : 98421 31493